# உலகக் கோப்பைத் தொடரில் இந்தியா சாதிக்கும்




சென்னை ஸ்ரீ சாய்ராம் பொறியியல் கல்லூரியில் கட்டப்பட்டுள்ள லியோ முத்து உள் விளையாட்டரங்கை திறந்து வைக்கிறார் சச்சின். உடன் கல்லூரியின் தலைமை நிர்வாக அதிகாரி சாய் பிரகாஷ் உள்ளிட்ட நிர்வாகிகள்.

**சென்னை, பிப்.10:** உலகக் கோப்பை கிரிக்கெட் தொடரில் இந்திய அணி சாதிக்கும் என்று கிரிக்கெட் வீரர் சச்சின் டெண்டுல்கர் கூறினார்.

சென்னை ஸ்ரீ சாய்ராம் பொறியியல் கல்லூரியில் கட்டப்பட்டுள்ள லியோ முத்து உள் விளையாட்டரங்கை கிரிக்கெட் வீரர் சச்சின் செவ்வாய்க்கிழமை திறந்து வைத்துப் பேசியது: இந்திய அணி தற்போது ஆஸ்திரேலியாவில் உள்ளது. வரும் உலகக் கோப்பைத் தொடர் சவால் நிறைந்ததாக இருக்கும். ஆனால், நம் அணி அதை எதிர்கொள்ளத் தயாராகவே இருக்கும். ரசிகர்களின் ஆதரவுடன் வீரர்கள் முடிந்தவரை சிறப்பாக செயல்பட்டு, மீண்டும் ஒரு முறை நம்

## சச்சின் நம்பிக்கை

முகத்தில் புன்னகையை வரவழைப்பர். அணி மீது எனக்கு முழு நம்பிக்கை உள்ளது. சிறப்பாக செயல்பட எனது வாழ்த்துகள்.

சென்னை எனக்கு மிகவும் ராசியான மைதானம். கடந்த 2008-ஆம் ஆண்டு இங்கு நடைபெற்ற முதல் டெஸ்டில் 2-ஆவது இன்னிங்ஸில் இங்கிலாந்து நிர்ணயித்த 387 ரன்களை துரத்திப் பிடித்து வெற்றி பெற்றதை மறக்க முடியாது. இங்கு நான் விளையாடிய ஒவ்வொரு ஆட்டத்திலும் எனக்கு அதிகபட்ச ஆதரவை அளித்து ஊக்குவித்த ரசிகர்களுக்கு நன்றி. போராட்ட குணமும், இடைவிடாத பயிற்சியும் இருந்தால் எத்தகைய வெற்றியும் சாத்தியமாகும். தனிப்பட்ட சாதனைகளைக் குறிவைத்து விளையாடியதில்லை. அணிக்காக களத்தில் நிற்கும்போது 'நான்' என்ற உணர்வு ஏற்பட்டால் வெற்றி அரிதாகிவிடும். ஒட்டுமொத்த வெற்றிக்குச் சரியான பங்களிப்பை வழங்க வேண்டும் என்பதை உணர்ந்தே விளையாடியிருக்கிறேன் என்றார் சச்சின்.

இந்த நிகழ்ச்சியில் ஸ்ரீ சாய்ராம் பொறியியல் கல்லூரியின் தலைமை நிர்வாக அதிகாரி சாய்பிரகாஷ், நிர்வாகிகள் கலைச்செல்வி லியோ முத்து, ரேவதி சாய்பிரகாஷ், முதல்வர் சி.வி.ஜெயக்குமார் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

Dinamani 11/2/15